# 79. THIRUMOOZHIKKALAM



| | |
|---|---|
| PLACE | THIRUMOOZHIKKALAM |
| PRESENT NAME | THIRUMOOZHIKKALAM |
| BASE TOWN | KALADI |
| DISTANCE | 12 KM |
| MOOLAVAR | THIRUMOOZHIKKALATHAN |
| THIRUKKOLAM | NINDRA |
| THIRUMUGAMANDALAM | EAST |
| UTHSAVAR | |
| THAYAR | MADURAVENI NACHIYAR |
| MANGALASASANAM | 14 PAASURAMS |
| PRATYAKSHAM | HAREEDHAR MAHARISHI |
| THEERTHAM | PERUNGULAM |
| VIMANAM | SOUNDARYA VIMANAM |
| NAMAVALI | Sri Madhuraveni nayiga sameda Sri Sookthinatha parabramane namaha |



கிருஷ்ண பகவான் துவாரகையில், ராமன், லட்சுமணன், பரதன், சத்ருகனன் என்ற 4 விக்ரகங்களை பூஜித்து வந்தார். ஒரு முறை இப்பகுதி தண்ணீரில் மூழ்கிய போது, வாக்கேல் கைமல் முனிவர் என்பவரிடம் இந்த விக்கிரகங்கள் கிடைத்தது. அன்றிரவு இவரது கனவில் தோன்றிய பகவான், இந்த விக்கிரகங்களை பாரதப்புழா ஆற்றின் கரையோர தலங்களில் பிரதிஷ்டை செய்ய கூறினார். இத்தலங்கள் தான் திருச்சூர் மாவட்டம் திருப்பறையார் ராமர் கோயிலாகவும், இரிஞ்சாலக்குடாவில் பரதன் கோயிலாகவும், பாயமல்லில் சத்ருக்கன் கோயிலாகவும், எர்ணாகுளம் மாவட்டம் திருமூழிக்களத்தில் லெட்சுமணப்பெருமாள் கோயிலாகவும் அமைந்துள்ளது. கேரளாவில் உள்ள பெருமாள் கோயில்களில் லெட்சுமணப்பெருமாள் என்ற திருநாமத்துடன் அருள்பாலிப்பது இங்கு மட்டும் தான். இத்தலம் குறித்து இன்னொரு வரலாறும் உண்டு. முன்னொரு காலத்தில் ஹரித மகரிஷி என்பவர் இத்தலத்தில் பெருமாளை

# 79. THIRUMOOZHIKKALAM

குறித்து தவமிருந்தார். இவரது தவத்தில் மகிழந்த பெருமாள் வேண்டும் வரம் கேள் என்றார். அதற்கு மகரிஷி,""பெருமாளே! இந்த உலக மக்கள் அனைவரும் உன்னை வந்து அடைவதற்கான எளிய வழிமுறையை கூறுங்கள்,"என்றார். அதற்கு பெருமாள்,""மகரிஷியே! மக்கள் அனைவரும் அவரவர்கள் செய்து கொண்டிருக்கும் தொழிலுக்கேற்ப (வர்ணாசிரம தர்மப்படி) எளிதில் என்னை அடைவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய பூஜை நெறிமுறைகளை போதிக்கும் "ஸ்ரீ ஸுக்தியை' (திருமொழியை) இந்த தலத்தில் உங்களுக்கு வழங்குகிறேன்," என்றார். எனவே தான் இத்தலம் திருமொழிக்களம் என்றும், பெருமாள் திருமொழிக்களத்தான் எனவும் வழங்கப்படுகிறது. இதுவே காலப்போக்கில் திருமூழக்களம் ஆனது.

கேரளாவின் பிரசித்தி பெற்ற பாரதப்புழா நதிக்கரையில் கோயில் அமைந்துள்ளது. இத்தலம் ஒரு காலத்தில் பெரிய கலாக்ஷேத்திரமாகவிளங்கியிருக்கிறது. "ஸ்ரீஸுஸீக்தி' இங்கு அருளப்பட்டதால் பல வகையான நூல்கள் இங்கு ஆராயப்பட்டன. இதனால் கற்றறிந்த பெரியோர்கள் குழுமியிருந்த கல்வி மாநகரமாகவும், கலை நகரமாகவும் இத்தலம் சிறப்புற்றிருந்தது. ராமன் வனவாசம் செல்லும்போது சித்திர கூடத்தில் தங்க நேரிட்டது. அப்போது அயோத்திக்கே ராமனை மீண்டும் அழைத்து செல்ல பரதன் அங்கு வந்தான். இதைக்கண்ட லட்சுமணன், ராமனுடன் போர் செய்யவே பரதன் வருவதாக நினைத்து, அவனை கொல்ல முயற்சிக்கிறான் . இது தவறு என்பதை உணர்ந்த லட்சுமணன், தவறுக்கு மன்னிப்பு வேண்டி இத்தலத்து பெருமாளிடம் அடிபணிந்து நின்றதாகவும், அப்போது பரதனே வந்து லட்சுமணனை ஆரத்தழுவி இன்சொல் கூறியதாகவும், இதனால் இத்தலம் "திருமொழிக்களம்' ஆனதாகவும் கூறுவர்.

நான்கு திருக்கரத்துடன் உள்ள இந்த பெருமாள் மேல் இரண்டு கைகளில் சங்கு, சக்கரம், வலது கீழ்க்கையில் கதை, இடது கீழ் கையில் தாமரை மலருடன் இடுப்பில் வைத்த கோலத்தில் கிழக்கு நோக்கி நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். மூலவரின் விமானம் சவுந்தரிய விமானம். இவரை ஹாரித மகரிஷி தரிசித்துள்ளார். சைவ வைணவ ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக இங்கு சிவனுக்கு தனி சன்னதி உள்ளது.

குழந்தை பாக்கியம் வேண்டுபவர்கள் இத்தலத்தில் திருவோண பூஜை செய்வது சிறந்த பலன் தரும் என்பது நம்பிக்கை. ஒரு வருடத்திற்கு முன்பாகவே திருவோண பூஜைக்கு புக்கிங் செய்ய வேண்டும். இவருக்கு சந்தனக்காப்பு செய்து நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள்.

லட்சுமணனும் பரதனும் சேர்ந்து வழிபட்ட தலமாகும். இத்தலத்திற்கு கோபுரம், மண்டபம் போன்றவற்றை லட்சுமணன் கட்டி பல திருப்பணிகள் செய்துள்ளான்.

**Sthlapuranam :**

In this sthalam, there is no separate sannadhi for Thaayar. Only, Bhagavadhi Amman sannadhi is found. Near to this sthalam, the Aalvaai river is found. The speciality of this sthalam is during the time of pooja done for the perumal, there is no music instrument are played. It is said that all the temple's Gopuram, Mandapan and pragharam of this sthalam are built by Lakshma (brother of Sri Ram) and he did various service to this temple.

During Ramayana, on hearing that Sri Ramar had been sent to the forest, Bharadan went in search of him to return him to Ayodhya for doing Pattabishekam for him. On seeing Bharadan coming from Ayodhya, Lakshmanan got angry with him and tried to kill him. Since, because of this bad thought and sinful act, to get rid of the sin, Lakshman served and got the seva of this sthala Emperumaan, Moozhikkalathaan.

At that time, it is said Bharadhan arised in this sthalam and higged each other and spoke various nice and beautiful words (Mozhi). Mozhi means the languages what we speak. Since, they transferred beautiful languages (Mozhi) with each other, this sthalam is named languages (Mozhi) with each other, this sthalam is named as "Thirumozhikkalam" and later changed to "Thirumoozhikkalam".

# 79. THIRUMOOZHIKKALAM

It is said this sthalaperumal is said to Laksman. There is a great explanation about this sthalaperumal. Generally, if a person does any bad things (or) sin, he should not be the person who can give justice to it.




If a person does any sin, he should accept that and should be in a position to accept the punishment and should feel for it. The person should do proper prayasiktham (an action performed after a sin is made to make the perumal satisfied). Likewise, Lakshmanan due to his sin made against Bharadhan, is seen as the Moozhikkalathaan on the banks of Aalvaai river. This sthalam is said to be the sthalam where the Paava Mannippu (the sthalam where the sin of Lakshmanan is apologized by Bharadhan). The perumal gave his prathyaksham for Vishwamitra Maharishi son Aareetha Maharishi. In this place, the great Sri Sakthi Mantram is explained by the the Lord Emperumal.

The speciality of this sthalam is during the time of pooja done for the Perumal, there is no music instrument are played

**Moolavar:**

The Moolavar of this sthalam is Thirumoozhikkalathaan. The Perumal is also named as Appan, Sri Sukthinathapperumal.

# 79. THIRUMOOZHIKKALAM

He is in Nindra thirukkolam facing his thirumugham along the Eastern direction. Prathyaksham for Aareetha Maharishi.




**Thayaar:**

The Thaayar of this sthalam is Madhuraveni Naachiyaar.

**Mangalasasanam:**

Nammalwar - 10 Paasurams.

**Pushkarani:**

Sanga Theertham. Thiru Sangu is the Hamsam of Bharadhan, brother of Sri Ramar and since Bharadhan stood as an help for Lakshmanan to get out his sin, the pushkarani is Sanga Theertham.

**Vimanam:**
Soundarya Vimaanam.

# 79. THIRUMOOZHIKKALAM

| திவ்யதேசம் 079<br>**திருமூழிக்களம்** (மூழிக்களம்) | |
|---|---|
| திருமங்கையாழ்வார் | 1553,2061,2674(129) |
| நம்மாழ்வார் | 3623_3633 |
| மொத்த பாசுரங்கள் | 14 |

### திருமங்கையாழ்வார்

1553 பனி ஏய் பரங் குன்றின் பவளத் திரளே
முனியே திருமூழிக்களத்து விளக்கே
இனியாய் தொண்டரோம் பருகும் இன் அமுது ஆய
கனியே உன்னைக் கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேனே (6)

2061 பொன் ஆனாய் பொழில் ஏழும் காவல் பூண்ட
புகழ் ஆனாய் இகழ்வாய தொண்டனேன் நான்
என் ஆனாய் என் ஆனாய் என்னல் அல்லால்
என் அறிவன்_ஏழையேன்? உலகம் ஏத்தும்
தென் ஆனாய் வட ஆனாய் குடபால் ஆனாய்
குணபால மத யானாய் இமையோர்க்கு என்றும்
முன் ஆனாய் பின் ஆனார் வணங்கும் சோதி
திருமூழிக்களத்து ஆனாய் முதல் ஆனாயே (10)

### பெரிய மடல்

2674 என்னை மனம் கவர்ந்த ஈசனை வானவர் தம
முன்னவனை மூழிக்களத்து விளக்கினை (129)

### நம்மாழ்வார்

### எம் பெருமானது வடிவழகே பற்றுக்கோடாக தலைவி திருமூழிக்களத்தே பறவைகளைத் தூதுவிடல் (திருமூழிக்களம்)

3623 எம் கானல் அகம் கழிவாய் இரை தேர்ந்து இங்கு இனிது அமரும்
செங்கால மட நாராய் திருமூழிக்களத்து உறையும்
கொங்கு ஆர் பூந் துழாய் முடி எம் குடக்கூத்தர்க்கு என் தூதாய்
நும் கால்கள் என் தலைமேல் கெழுமீரோ நுமரோடே (1)

3624 நுமரோடும் பிரியாதே நீரும் நும் சேவலுமாய்
அமர் காதல் குருகு இனங்காள் அணி மூழிக்களத்து உறையும்
எமராலும் பழிப்புண்டு இங்கு என் தம்மால் இழிப்புண்டு?
தமரோடு அங்கு உறைவார்க்குத் தக்கிலமே? கேளீரே (2)

3625 தக்கிலமே கேளீர்கள்! தடம் புனல்வாய் இரை தேரும்
கொக்கு இனங்காள் குருகு இனங்காள் குளிர்மூழிக்களத்து உறையும்
செக்கமலத்து அலர் போலும் கண் கை கால் செங்கனி வாய்
அக் கமலத்து இலைப் போலும் திருமேனி அடிகளுக்கே (3)

3626 திருமேனி அடிகளுக்குத் தீவினையேன் விடு தூதாய்
திருமூழிக்களம் என்னும் செழு நகர்வாய் அணி முகில்காள்

# 79. THIRUMOOZHIKKALAM

திருமேனி அவட்கு அருளீர் என்றக்கால் உம்மைத் தன்
திருமேனி ஒளி அகற்றி தெளி விசும்பு கடியுமே? (4)

3627 தெளி விசும்பு கடிது ஓடி தீ வளைத்து மின் இலகும்
ஒளி முகில்காள் திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடர்க்கு
தெளி விசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்து உறையும்
துளி வார் கள் குழலார்க்கு என் தூது உரைத்தல் செப்புமினே (5)

3628 தூது உரைத்தல் செப்புமின்கள் தூ மொழி வாய் வண்டு இனங்காள்
போது இரைத்து மது நுகரும் பொழில் மூழிக்களத்து உறையும்
மாதரைத் தம் மார்வகத்தே வைத்தார்க்கு என் வாய் மாற்றம்
தூது உரைத்தல் செப்புதிரேல் சுடர் வளையும் கலையுமே (6)

3629 சுடர் வளையும் கலையும் கொண்டு அருவினையேன் தோள் துறந்த
படர் புகழான் திருமூழிக்களத்து உறையும் பங்கயக்கண்
சுடர் பவள வாயனைக் கண்டு ஒருநாள் ஓர் தூய் மாற்றம்
படர் பொழில்வாய்க் குருகு இனங்காள் எனக்கு ஒன்று பணியீரே. (7)

3630 எனக்கு ஒன்று பணியீர்கள் இரும் பொழில்வாய் இரை தேர்ந்து
மனக்கு இன்பம் பட மேவும் வண்டு இனங்காள் தும்பிகாள்
கனக்கொள் திண் மதிள் புடை சூழ் திருமூழிக்களத்து உறையும்
புனக்கொள் காயா மேனிப் பூந் துழாய் முடியார்க்கே (8)

3631 பூந் துழாய் முடியார்க்கு பொன் ஆழிக் கையாருக்கு
ஏந்து நீர் இளம் குருகே திருமூழிக் களத்தாருக்கு
ஏந்து பூண் முலை பயந்து என் இணை மலர்க் கண் நீர் ததும்ப
தாம் தம்மைக்கொண்டு அகல்தல் தகவு அன்று என்று உரையீரே (9)

3632 தகவு அன்று என்று உரையீர்கள் தடம் புனல்வாய் இரை தேர்ந்து
மிக இன்பம் பட மேவும் மேல் நடைய அன்னங்காள்
மிக மேனி மெலிவு எய்தி மேகலையும் ஈடு அழிந்து என்
அகமேனி ஒழியாமே திருமூழிக்களத்தார்க்கே (10)

3633 ஒழிவு இன்றித் திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடரை
ஒழிவு இல்லா அணி மழலைக் கிளிமொழியாள் அலற்றிய சொல்
வழு இல்லா வண் குருகூர்ச் சடகோபன் வாய்ந்து உரைத்த
அழிவு இல்லா ஆயிரத்து இப் பத்தும் நோய் அறுக்குமே (11)

**Festivals :** Vaikuntha Ekadasi, Thiruvonam.

**Temple Timings:** 5.00 am to 11.00 am
5.00 pm to 7.30 pm

**Address :** Arulmigu Lakshmana Perumal Thirukkoil,
Thirumoozhikkalam - 683572,
Ernakulam District.
Kerala State

# 79. THIRUMOOZHIKKALAM

**Phone :** 0484 - 2473996

**Location :** This sthalam is situated near Aalvaai city in Kerala state. We can get down in Aalvaai and from there, we can reach Moozhikkalam by travelling in the bus. From Ernakulam also, we can reach this sthalam by bus. To get into this sthalam, we have to travel about 1 Km from Moozhikkalam by road. From Kaaladi road railway station, if we travel 7 miles towards the western direction, we can reach this sthalam. There is no lodging facility available.

**Nearest Railway Station:** Angamali

**Nearest Airport:** Nedumbacheri

**Hotels :** Plenty of good hotels in Ernakulam

Courtesy : Sri Seshadri Swamy
Dr.V.Satagopan Swamy
www.pbase/svami
Dinamalar